MELUR MUNICIPALITY

Minutes of the Council Meeting held on **29.12.2023** (Ordinary)

<table>
<tr><th>Resolution No.</th><th>Serial Number and subject in the Agenda</th><th>Decision of the Council</th></tr>
<tr><td></td><td>29.12.2023 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு<br>நடைபெறவுள்ள சாதாரணக்கூட்டம்<br>முன்னிலை: திரு.உ.முகமதுயாசின், நகர்மன்றத்தலைவர்</td><td></td></tr>
<tr><td>389</td><td><u>மன்றப்பொருள் எண்</u><u>.1</u><br><br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட சிவன்கோவில் அருகில் உள்ள நகராட்சி ஆரம்ப பள்ளியில் ரூ.190.00இலட்சம் மதிப்பீட்டில் 5 எண்ணிக்கை கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிக்கு நிர்வாக அனுமதி பெற விரிவான திட்ட அறிக்கை, கட்டிட வடிவமைப்பு தயார்செய்தல் மற்றும் மண்பரிசோதனை போன்றவைகள் மேற்கொள்ள 20.09.2023 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><td>1.</td><td>M/s Ayothy Consultancy</td><td>1.50 % (மதிப்பீட்டில்)<br>DPR 0.55இலட்சம் – Soil Design</td></tr>
<tr><td>2.</td><td>M/s Sama Consultion</td><td>1.80 % (மதிப்பீட்டில்)<br>DPR 0.55இலட்சம் – Soil Design</td></tr>
<tr><td>3.</td><td>PSM Engineering & Construction</td><td>2.00 % (மதிப்பீட்டில்)<br>DPR 0.55 இலட்சம் – Soil Design</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் வழங்கிய Ayothy consultancy நிறுவனத்தின் விலைப்புள்ளியினை அனுமதிக்கலாம். மேலும் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இப்பணியை நகராட்சி கல்வி நிதி 2023-24இன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr><td>390</td><td>

<u>**மன்றப்பொருள் எண்**.2</u>

நகர்மன்ற தீர்மான எண்.339 நாள்.29.09.2023 நாளில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் அடிப்படையில் இந்நகராட்சி பொதுசுகாதாரம் பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் 4 சக்கர வாகனங்களை இயக்க 4 ஓட்டுநர்கள் பணி செய்ய பெறப்பட்ட கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

<table>
<tr><td>வ.எண்.</td><td>பெயர் மற்றும் முகவரி</td><td>ஒரு ஓட்டுநருக்கு நாள் ஒன்றுக்கு. ரூ.</td></tr>
<tr><td>1</td><td>எம்.லத்திப் , ஒப்பந்ததாரர்,<br>36, நாளங்காடி தெரு, மேலூர்</td><td>520/-</td></tr>
<tr><td>2</td><td>கங்கை டிரேடர்ஸ்</td><td>590/-</td></tr>
<tr><td>3</td><td>எம்.அஜ்மல்கான் ஒப்பந்தாரர்,<br>33, மார்க்கெட் தெரு, மேலூர்.</td><td>555/-</td></tr>
</table>

அலுவலகக்குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பொதுசுகாதாரப்பிரிவு அவசர அவசியம் கருதி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு.எம்.லத்திப் ஒப்பந்ததாரருக்கு பணிஉத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>391</td><td>

<u>**மன்றப்பொருள் எண்**.3</u>

மேலூர் நகராட்சி பொதுசுகாதாரம் திடக்கழிவுமேலாண்மை இந்நகர்மன்ற தீர்மான எண்.432 நாள்.31.01.2019 மற்றும் தீர்மானம் எண்.506 நாள்.08.03.2019ன்படியும் 30 மற்றும் 20= 50 நபர்களை மதுரை ஜெய்சீரடி சாய் மேன்பவர் ஏஜென்ஸி நிறுவனத்தின் மூலம் சப்ளை செய்து (Manpower) பொதுசுகாதாரப்பணி திடக்கழிவு மேலாண்மைப்பணிகளை மேற்கொள்ள அனுமதித்துள்ளதின்பேரில் இதுநாள்வரை மேற்படி 50 மனித திறன்களை பயன்படுத்தி வரப்பட்டது.

மேலும் புதிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மேற்படி ஒப்பந்தப்புள்ளிக்கு தடைபெறப்பட்ட வழக்கு மாண்பமைமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் 05.10.2023 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மனுதாரரால் மேற்படி வழக்கு W.P.(MD).No.4345 மற்றும் W.P.No.5121/2023 வாபஸ் கோரியதன் (Withdrawn) பேரில் 05.10.2023 அன்று மேற்கண்ட சென்னை மாண்பமைமிகு உயர்நீதிமன்றத்தால் Withdrawவிற்கு அனுமதித்து வழக்கினை தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | எனவே மேற்கண்ட உத்தரவின் அடிப்படையில் பொதுசுகாதார நலன்கருதி புதிய ஒப்பந்தப்புள்ளி நடைமுறை முடிவுக்கு வரும்வரை அல்லது மூன்று மாத காலத்திற்கு மேற்படி 30+ 20 = 50 மனிதத்திறன் வேண்டியும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>அ. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ. பொதுசுகாதாரத்தின் அவசியம் கருதி பணியினை ஏற்கனவே பார்த்துவரும் மதுரை ஜெய்சீரடி சாய் மேன்பவர் ஏஜென்ஸி நிறுவனத்திடம் பழைய ஒப்பந்தப்புள்ளி விகிதத்திலேயே பணிகளை மேற்கொள்ள சம்மதக்கடிதம் பெற்று பணிகள் மேற்கொள்ள பணிஉத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 392 | **மன்றப்பொருள் எண்**.4<br><br>மேலூர் நகராட்சியில் நகர்மன்றத்தலைவர் அவர்கள் பயன்படுத்தி வரும் TN59CV0123 எண்ணுள்ள ஸ்கார்பியோ வாகனத்தில் ஆயில் சர்வீஸ், வீல், அலைன்மெண்ட் மற்றும் சிறு,சிறு பழுதுகள் ஆகியவற்றை M/s Automotive Manufactures PVT Ltd. நிறுவனம் மூலம் சரிசெய்யப்பட்டது. மேற்படி நிறுவனத்திற்கு செலவினத்தொகை ரூ.14340/-ஐ ஓட்டுநர் திரு.பெ.கர்ணன் என்பவரால் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி செலவினத்தொகையை திரு.பெ.கர்ணன் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 393 | **மன்றப்பொருள் எண்**.5<br><br>மேலூர் நகராட்சியின் புதுசுக்காம்பட்டி கிராமம் புல எண்.275/2ல் 34.5செண்டு விஸ்தீரணம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பழைய உரக்கிடங்கு பயன்பாடற்ற நிலையில் உள்ள இடத்தில் மூன்று மதத்திற்கான பொது சுடுகாடு கபர்ஸ்தானம், கல்லறையாக பயன்டுத்தி கொள்ள நகர்மன்றத்தில் தீர்மானம் இயற்றப்பட்டதை தொடர்ந்து மேற்படி இடத்தில் பொது சுடுகாடு கபர்ஸ்தானம் மற்றும் கல்லறை அமைக்க கூடாது என ஆட்சேபித்து மேலூர் திரு.நடராஜன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.W.P.(MD).No.1130/22 வழக்கில் இந்நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.ஆர்.சுரேஷ்குமார் ஆஜராகியதற்கும், அதற்கான கட்டணம் ரூ.9500 (ரூபாய் ஒன்பது ஆயிரத்து ஐநூறு மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண்.2282/2021/எப்1) | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 394 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.6<br><br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்கள் பயன்படுத்தி வரும் TN58 CG6666 எண்ணுள்ள ஈப்பு வாகனத்தில் ஆயில்சர்வீஸ், கியர் பாக்ஸ், வயரிங் ஒர்க், புதிதாக பேட்டரி மாற்றுதல் போன்ற பணிகளை குநோபல் கார்ஸ் கம்பெனியில் சரிசெய்யப்பட்டதற்கு செலவினத்தொகை ரூ.24771/- ஐ திரு.கே.பழனிக்குமார் என்பவரால் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை திரு.K.பழனிக்குமார் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 395 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.7<br><br>இந்நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண் W.P.(MD).No.4345 வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக ஆஜராகிய வழக்கறிஞர் (Standing Council) திரு.ஆர்.சுரேஷ்குமார் என்பவர் வழக்கறிஞர் கட்டணம் ரூ.9500/- வழங்க கோரியதை தொடர்ந்து மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 396 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.8<br><br>இந்நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண் W.P.(MD).No.1086/2019 வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக ஆஜராகிய வழக்கறிஞர் (Standing Council) திரு.சுரேஷ்குமார் என்பவர் வழக்கறிஞர் கட்டணம் ரூ.9500/- வழங்க கோரியதை தொடர்ந்து மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 397 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.9<br><br>மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் மேலூர் நகராட்சி ஆணையாளர் அவர்களை பிரதிவாதிகளாக கொண்டு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(MD).No.25233/2023 ல் திரு.முருகன் த/பெ முனியாண்டி காந்திஜி பூங்கா தெரு என்பவரால் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கிற்கு வழக்கறிஞர் திரு.ஏ.பாண்டியராஜன் அவர்கள் இந்நகராட்சி சார்பாக ஆஜராகவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.1722/2023/எச்1 | அனுமதிக்கப்பட்டது. |
| 398 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.10<br><br>மேலூர் நகராட்சியில் செயல்பட்டுவரும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் மேலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் உள் நோயாளிகளுடன் வரும் பாதுகாவலர்கள் தங்குவதற்கான சிறப்பு தங்குமிடம் அமைக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள மதிப்பீட்டின் படி சிறப்பு தங்குமிடத்தை SWEED TRUST தொண்டு நிறுவனம், மதுரை அவர்கள் மூலம் மூன்று வருடங்களுக்கு பாராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 15.11.2023 ல் ஒப்பந்தப்பத்திரம் வழங்கியுள்ளார். அதன் அடிப்படையிலும், தலைவர் மற்றும் அரசு முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் 18.04.2022 ல் வழங்கிய நிர்வாகஅனுமதியின்படியும் நிபந்தனைகளின்படியும், மேற்படி தங்குமிடத்தை பராமரிப்பு பணி மேற்கொள்ள மேலாளர்-1, கவனிப்பாளர்-2, பாதுகாவலர்-1, சுத்தப்படுத்துதல்-1 எண்ணிக்கை ஆகிய பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் பக்கெட், ஜக், பெட்சிட் மற்றும் கால்மிதியடி போன்ற பொருட்கள் வாங்குவதற்கு வருடத்திற்கு ஆகும் செலவினத்தொகைக்கும் NULM நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு<br><br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியானது பொது சுகாதார சம்மந்தப்பட்ட பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று SWEED TRUST மதுரை அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 399 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.11<br><br>நகராட்சிநிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். 25741/2023/SS2 நாள்.26.10.2023 ல் பள்ளிமேம்பாட்டு மானியம் – மூலதனநிதி (capital grand) இயக்கம் மற்றும் பராமரிப்பு பணி (O&M) 2023-24இன் கீழ் ரூ.190.00இலட்சம் மதிப்பீட்டில் சிவன்கோவில் தெருவில் உள்ள நகராட்சி ஆரம்ப பள்ளியில் புதிதாக வகுப்பறை கட்டிடங்கள் கட்ட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கு அங்குள்ள ஆஸ்பெட்டாஸ் சீட்டில் மேற்கூரை வேயப்பட்டுள்ள பழைய கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தப்படவுள்ளது. பள்ளி கட்டிடம் கட்டி முடிக்கும் வரை அங்கு பயிலும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு கல்வி கற்றுக்கொடுக்க பள்ளி கட்டிடம் தேவைப்படுகிறது. எனவே இதற்கு மாற்று ஏற்பாடு செய்வதற்கு, இந்நகராட்சிக்கு சொந்தான வார்டு எண்.3, கம்பர் தெருவில் உள்ள சமுதாயக்கூடம் பராமரிப்புஇன்றி, மின்வசதி, தண்ணீர் மற்றும் கழிப்பறை வசதியில்லாமல் உள்ளது. எனவே பள்ளி நடத்த அனுமதிக்கும், மேற்படி சமுதாயக்கூடத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவு தயார்செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு<br>அலுவலகக்குறிப்பு<br>1) சமுதாய கூடம் பராமரிப்பு பணிமேற்கொள்வதை நகராட்சி கல்விநிதி 2023-24ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பள்ளி மாணவ, மாணவிகளின் நலன்கருதியும், மாணவர்களுக்கு கல்விகற்கும்பொருட்டு மேற்படி பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.344/2023/இ1 | அனுமதிக்கப்பட்டது. |
| 400 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.12<br>மேலூர் நகராட்சியில் ஆணையாளர் அவர்கள் பயன்படுத்திவரும் TN59CB1296 எண்ணுள்ள ஈப்பு வாகனத்தில் ஆயில் சர்வீஸ், கிளச்பாக்ஸ், பிரேக், AC மற்றும் டோர் போன்றவைகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யப்பட்டதற்கு திருவாளர்கள் Automotive Manufacture PVT Ltd, Madurai நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.29648/- ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி ஈப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யப்பட்டதற்கு செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 401 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.13<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.21335/2021/எம்.2 நாள்.27.11.2023 மற்றும் அரசாணை (நிலை) எண். 760 நாள்.14.12.2023 பொது ( முதல்வரின் முகவரித் துறை) ன்படி தமிழகத்தில் பொதுமக்களின் கோரிக்கைகளை அவர்களின் இருப்பிடத்திலேயே நிவர்த்தி செய்ய மக்களுடன் முதல்வர் எனும் திட்டத்தினை செயல்படுத்த 27 வார்டுகளிலும் சிறப்பு முகாம் நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>1. குடிநீர் வசதி, டேபிள் சேர், மின்சார வசதி, போதியகணினிகள் மற்றும் இணைய சேவை வசதிகள்<br>2. மேற்படி திட்டமானது பொதுமக்களுக்கு தெரியப்படுத்தும் வகையில் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் டிஜிட்டல்பேனர்கள், முகாம் நடைபெறும் இடங்களில் டிஜிட்டல் பேனர்கள் மற்றும் ஆட்டோவிளம்பரம் செய்தல்.<br>3. நகராட்சிக்கு பாத்தியப்பட்ட இரண்டு சமுதாயக்கூடங்கள் மட்டுமே உள்ளது. மற்ற மூன்று இடங்களில் மண்டப வசதி, தரைவிரிப்புகள் மற்றும் ஜெனரேட்டர் வசதி ஏற்படுத்துதல்.<br>4. முகாமில் கலந்துகொள்ளும் அனைத்துதுறை அலுவலர்கள் மற்றும் நகராட்சி பணியாளர்களுக்கு மதிய உணவு மற்றும் இரண்டு வேலை தேனீர், வடை போன்றவை வழங்குதல்<br>5. முகாமில் கலந்துகொள்ளும் அனைத்து துறை அதிகாரிகளுக்கும் ஸ்டேசனரி பொருட்கள் வழங்குதல்.<br>மேற்கண்டவாறு உள்ள அடிப்படை வசதிகளை முகாம் நடைபெறும் இடங்களில் ஏற்படுத்தி கொடுக்க தயார்செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.8.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மக்களுடன் முதல்வர் திட்டத்திற்காக நடைபெறும் முகாம்களில் மேற்கண்டவாறு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கொள்ள போதிய கால அவகாசம் இல்லாததாலும் மக்களின் கோரிக்கை சம்பந்தமாக இருப்பதால் மேற்படி பணியின் அவசரம் கருதி ஒப்பந்ததாரர் திரு.எம். அஜ்மல்கான் என்பவர் மூலம் ஒப்படைப்பு பணியாக மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 402 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.14<br>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள பழைய வார்டு எண்.9,10, வார்டுகளில் திரு.பி.முத்துராஜ், திரு.பி.இராமகிருஷ்ணன், செட்டியார் மற்றும் திரு.எஸ்.சங்கையா என்பவர்கள் பெயர்மாற்றம் செய்யக்கோரி (வரிவிதிப்பு எண்கள் 3541, 3609,3610) நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு வழக்கு எண்கள் W.P.(MD).No.23480/2016. W.P.(MD).No23481/2016 , W.P.(MD).No.23482/2016 நிலுவையில் உள்ளதை தொடர்ந்து நடத்துவதற்கு நகராட்சி வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணம் தலா ரூ.9500/- வீதம் ரூ.28500/- வழங்க | அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td>மன்றத்தின் அனுமதிக்கு.<br>‘அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கு.</td><td></td></tr>
<tr><td>403</td><td><u>மன்றப்பொருள் எண்</u><u>.15</u><br><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பொதுமக்கள் செலுத்த வேண்டிய சொத்துவரி, தொழில்வரி , குடிநீர் கட்டணம் , கடை வாடகை மற்றும் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க இனங்களின் செலுத்த வேண்டிய தொகையினை செலுத்த கோரிய ஆட்டோ மூலம் (மைக்செட் வைத்து) விளம்பரம் மேற்கொள்ள அவசர அவசியம் கருதி உள்ளூர் (ம) வெளியூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி கோரவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/-(ரூபாய் ஐம்பது ஆயிரம் மட்டும்) க்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.737/2022/அ1</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>404</td><td><u>மன்றப்பொருள் எண்</u><u>.16</u><br><br>பள்ளி மேம்பாட்டு மான்யம்- மூலதனநிதி (Capital Work) மற்றும் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணி (O&M Work) 2023-24இன் கீழ் ரூ.190.00 இலட்சம் மதிப்பீட்டில் சிவன்கோவில் அருகில் உள்ள நகராட்சி ஆரம்பப்பள்ளியில் 5 எண்ணிக்கை கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிக்கு 24.11..2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>
<table>
<tr><td>1.</td><td>திருவாளர்கள் ASK சுந்தரமூர்த்தி, சிவகங்கை</td><td>0.02%மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திருவாளர்கள் V.அங்குராஜ், ஸ்ரீபாலாஜி கன்ஸ்ட்ரக்சன், மதுரை.</td><td>9.46% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம்</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br><br>1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள M/S ASK சுந்தரமூர்த்தி என்பவரது ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியானது திட்டப்பணியென்பதால் குறிப்பிட்ட கால அளவிற்குள் முடிக்கப்பட வேண்டியுள்ளதால் பணியின் அவசரஅவசியம் கருதி மேற்படி ஒப்பந்ததாரருக்கு LOA கடிதம் வழங்கி,</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | கூடுதல் முன் வைப்புத்தொகை பெறப்பட்டுவேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 405 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.17<br><br>மேலூர் நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தைக்கும் மற்றும் பேருந்து நுழைவு கட்டணம் வசூல் செய்யும் இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரிட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.2212/2018/அ2 நாள்.27.11.2018 மாவட்ட ஆட்சித்தலைவர் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகம் வெ.ஆ.எண்.684/12 நாள்.29.11.2018 வாயிலாக விளம்பரம் செய்யப்பட்டு ஏலநடவடிக்கை தொடரப்பட்டது. ஆனால் மேற்படி ஏல அறிவிப்பு முறையாக விளம்பரம் செய்யப்படவில்லை என ஆட்சேபித்து இந்நகராட்சிக்கு எதிராக வழக்கு எண் W.P.(MD).No.24857/2018ல் திரு.P.செந்தில்குமரன் த/பெ C.ராஜேந்திரன் என்பவரால் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளதை தொடர்ந்து நடத்துவதற்கு இந்நகராட்சி அரசு வழக்கறிஞர் திரு.P.T.திரவியம் அவர்கள் வழக்கு கட்டணம் ரூ.9500/-(ரூபாய் ஒன்பது ஆயிரத்து ஐநூறு மட்டும்) வழங்க கோரியுள்ளதால் மேற்படி வழக்கு கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 406 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.18<br><br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு 19, சிவன்கோவில் தெருவில் உள்ள சமுதாய கழிப்பறையை பழுதுநீக்கம் செய்து புதுப்பிக்கும் பணிக்கு ரூ.3.95இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 407 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.19<br><br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் ஆழ்துளை கிணறுகளில் உள்ள மின் மோட்டார்கள் பழுது ஏற்படும் பட்சத்தில் பழுதினை சரிசெய்யும் வரை சீரான முறையில் குடிநீர் விநியோக செய்வதில் சிரம்ம் ஏற்படுகிறது. எனவே மின்மோட்டார் பழுது ஏற்படும் காலத்திலும் தடையின்றி குடிநீர் விநியோகிக்க புதிதாக | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | நான்கு எண்ணிக்கை மின் மோட்டார்கள் வாங்கிகொள்ள உத்தேச்செலவினத்தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | |
| 408 | **<u>மன்றப்பொருள் எண்</u>**<u>.20</u><br><br>இந்நகராட்சியில் பணிபுரியும் 37 நிரந்தர பணியாளர்களுக்கு Safety Equipments (கம்ப்பூட்ஸ். கிளவுஸ், மாஸ்க், ஹெல்மெட், Reflector Jacket) பொதுசுகாதார அவசர அவசியம் கருதி உரிய அரசு விதிமுறைகளைப் பின்பற்றி உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரவும் நகர்மன்ற அனுமதி பெற்று வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினத்திற்கு ரூ.1.20இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 409 | **<u>மன்றப்பொருள் எண்</u>**<u>.21</u><br><br>இந்நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு Washable Glouse இருப்பில் முற்றிலும் இல்லை. எனவே பொதுசுகாதார அவசர அவசியம் கருதி வாரம் ஒரு முறை வழங்க 750 ஜோடிகள் Washable Glouse இந்நகர்மன்ற அனுமதி பெற்று உரிய அரசு விதிமுறைகளின்படி வாங்கி வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதி பெற்ற வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 410 | **<u>மன்றப்பொருள் எண்</u>**<u>.22</u><br><br>மேலூர் நகராட்சி பொதுசுகாதாரம் இந்நகராட்சி பகுதிகளில் தற்போது டெங்கு (Dengue Positive Case) அதிகமாக இருப்பதாலும் மழைக்காலமாக இருப்பதாலும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி பொதுமக்களுக்கு ஆங்காங்கே வழங்க வேண்டிய 100கிலோ நிலவேம்பு கசாயம் உரிய அரசு விதிமுறைகளை பின்பற்றி உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரவும் நக்ரமன்றத்தின் | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அனுமதிபெற்று வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.25இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | |
| 411 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.23<br><br>மேலூர் நகராட்சி பொதுசுகாதாரம் கொசுதடுப்பு பணி- (Domestic Breeding checking) பணிக்கு தேவையான கணக்கெடுப்பு படிவம் இருப்பில் இல்லாத காரணத்தால் 20000 (200book) படிவங்கள் டெங்கு தடுப்பு பணி அவசியம் கருதி உரிய அரசுவிதிமுறைகளின்படி உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரவும் நகர்மன்ற அனுமதி பெற்று வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.30000/- மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 412 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.24<br><br>மேலூர் நகராட்சி பொதுசுகாதாரம் இந்நகர்மன்ற தீர்மான எண்.340 நாள்.29.09.2023 உத்தரவு ந.க.எண்.417/2020/எச்1 நாள்.29.09.2023 ன்படி 40 பணியாளர்கள் (மனிதத்திறன்கள்) ஒப்பந்தம் மூலம் சப்ளை செய்யப்பட்டு இந்நகராட்சிப்பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகள் மூன்று மாத காலத்திற்கு 01.10.2023 முதல் 31.12.2023 வரை மேற்கண்ட அலுவலக உத்தரவின்படியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>மேலும் இந்நகராட்சி அலுவலக உத்தரவு ந.க.எண்.3123/2017/எச்1 நாள்.12.10.2023ன்படி இந்நகராட்சிப்பகுதியில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ள 50 பணியாளர்கள் ஒப்பந்தம் மூலம் மூன்று மாத காலத்திற்கு 12.10.2023 முதல் 31.12.2023 வரை சப்ளை செய்யப்பட்டு பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>மேற்கண்டவாறு 40+50=90 தூய்மைப்பணியாளர்கள் ஒப்பந்தம் மூலம் (மனிதத்திறன்கள்) சப்ளை செய்யப்பட்டு இந்நகராட்சி 27 வார்டுகளில்திடக்கழிவு மேலாண்மை பணிகள் நடைபெற்று வருகிறது.<br>தற்போது மாண்பமைமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் உத்தரவு நாள்.26.10.2023 W.P.(MD).No.25983/2023 மற்றும் W.P.(MD).22356/2023ன்படியும் Interim stay அதை தொடர்ந்து Government Pleader திரு.P.Thilakkumar அவர்களின் Opinion Hence the department shall not take any further steps course of action based on the said tender Notification until the interim stay is vacated in W.M.P.(MD)No.22356/2023 in W.P.(MD).No.25983 of 2023 on file of the Hon'ble Madurai Bench of Madras | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | High court ன்படியும் புதிதாக Tender வைத்து அந்த ஒப்பந்தப்புள்ளி நடைமுறைக்கு வரும் வரை அல்லது மூன்று மாதங்களுக்கு 01.01.2024 முதல் 31.03.2024 அல்லது மேற்கண்ட Stay vacate ஆகும் வரை திடக்கழிவு மேலாண்மை பணிகள் அத்தியாவசிய பணிகள் என்பதால் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி 90 பணியாளர்கள் (மனிததிறன்கள்)வேண்டி உரிய அரசு விதிமுறைகளின்படியும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி ஏற்கனவே பார்த்துவரும் ஜெய்சீரடி மேன்பவர் ஏஜென்ஸி நிறுவனத்திடம் பழைய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்திலேயே பணிமேற்கொள்ள உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | |
| 413 | <u>**மன்றப்பொருள் எண்**.25</u><br><br>மேலூர் நகராட்சி பொதுசுகாதாரம் திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தில் பொதுசுகாதாரப்பிரிவு வாகனங்களை இயக்கபோதுமான நிரந்தர ஓட்டுநர்கள் இல்லாததால் திடக்கழிவுமேலாண்மைப் பணிகளில் தொய்வு ஏற்படாமல் இருக்க பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மதுரை மாவட்ட ஆட்சியரகத்தின் விலைவிகிதத்தில் ஓட்டுநர்களுக்கான தினக்கூலி அடிப்படையில் 01.01.2024 முதல் 31.03.2024 வரை மூன்று மாத காலத்திற்கு 4 ஓட்டுநர்களை உரிய அரசு விதிமுறைகளின்படி இந்நகர்மன்ற அனுமதி பெற்று ஒப்பந்ததாரர் மூலம் சப்ளை செய்யவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>அ) மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) பொதுசுகாதாரத்தின் அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 414 | <u>**மன்றப்பொருள் எண்**.26</u><br><br>மேலூர் நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு அத்தியாவசியமாக கீழ்க்கண்ட செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.<br><br>**1** \| தூய்மைக்கான மக்கள் இயக்கத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்த பேனர்கள் அச்சடித்த வகையில் செலவு செய்யப்பட்ட தொகை \| **ரூ.6000** | அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>பிறப்பு , இறப்பு பதிவு மற்றும் பிறப்பு, இறப்பு சான்று (Online) பேனர் அடித்த வகையில் செலவு</td><td>ரூ.5000</td></tr>
<tr><td>3.</td><td>தூய்மைப்பணியாளர்கள் மேம்பாடு Survey பணிகள் SWDS பேனர் அடித்த வகையில் செலவு</td><td>ரூ.1500</td></tr>
</table>
மேற்கண்டவாறு மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினத்தொகை ரூ.12500/- மன்றத்தின் அனுமதிக்கு.<br>
அலுவலகக்குறிப்பு<br>
1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2) பொதுசுகாதாரப்பிரிவு அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிகளை இந்நகராட்சியின் துப்புரவு ஆய்வாளர் திரு.வே.சுப்பையா அவர்களால மேற்கொள்ளப்பட்ட செலவினத்தொகை ரூ.12500/- ஐ தனியருக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>415</td>
<td>
<u>மன்றப்பொருள் எண்</u><u>.27</u><br><br>
மேலூர் நகராட்சிக்குப்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகிக்க குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் வால்வுகளை இயக்குவதற்கு பணியாளர்களை சப்ளை செய்யும் பணியினை ஒப்பந்த அடிப்படையில் விவேகாந்தா டெக்னிக்கல் கான்ட்ராக்ட் மதகுப்பட்டி நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரப்பட்டது. மேற்படி நிறுவனத்தில் பணிபுரியும் ஒப்பந்த பணியாளர்களுக்கு மாதமாதம் சரியாக ஊதியம் வழங்கப்படவில்லை என திரு.எம்.கதிரேசன் மற்றும் நான்கு நபர்கள் 26434/2013 மற்றும் திரு.ஜாகிர் உசேன் மற்றும் இரண்டு நபர்கள் சேர்ந்து 26435/2023 இன வாரியாக மேலூர் நகராட்சி ஆணையாளர்,மாவட்ட தொழில் மையம் மற்றும் விவேகானந்தா டெக்னிக்கல் லேபர் கான்ட்ராக்டர் மதகுபட்டி ஆகியோர்களை எதிர்மனுதாரர்களாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி இரண்டு வழக்கிற்கும் எதிர்வாதுரை தயார் செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு வழக்கு கட்டணமாக ரூ9500/ வீதம் இரண்டு வழக்கிற்கு 19000/- திரு.ஏ.பாண்டியராஜன் வழக்கறிர் என்பவர்க்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>
அலுவலகக்குறிப்பு<br>
1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2) வழக்கின் அவசர அவசியம் கருதி வழக்கு கட்டணத்தொகை ரூ19000/- வழக்கறிஞர் திரு. ஏ.பாண்டியராஜன் என்பவர்க்கு நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 416 | <u>**மன்றப்பொருள் எண்.28**</u><br>மேலூர் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் மேற்கொள்வதற்கு (Outsourcing) 21.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி கோரியதனை ஆட்சேபித்து திரு.சேவுகமூர்த்தி மற்றும் நான்கு நபர்கள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை மற்றும் ஆணையாளர் பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.No.25983/2023 மற்றும் WMP(MD)22356/2023 இன்படி வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கில் நகராட்சி தரப்பில் வழக்கு நடத்துவதற்கு திரு.P.திலக்குமார் அரசு வழக்கறிஞர் அவர்களை நியமித்து கொள்வதற்கும், எதிர்வாதுரை தாக்கல் செய்வதற்கு வழக்கு கட்டணத்தொகை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>வழக்கின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 417 | <u>**மன்றப்பொருள் எண்.29**</u><br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட மூவேந்தர் தெருவில் மழைக்காலங்களில் மழைநீர் வெளியேறாமல் சாலையில் தேங்கி போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது என அப்பகுதி பொதுமக்கள் புகார் செய்தனர். அதன்படி மேற்படி இடத்தினை நேராய்வு செய்யப்பட்டது. மேற்படி பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்க தயார்செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.1.40இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 418 | <u>**மன்றப்பொருள் எண்.30**</u><br>மேலூர் நகராட்சியில் பொதுநிதி 2023-24இன்கீழ் பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு (Outsourcing) பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தயார்செய்து அதனை மாநில அளவில் தினசரி பத்திரிக்கையில் பிரசுரம் செய்யப்பட்டது. இதற்கு விளம்பரக்கட்டணமாக ரூ.36943/- திருவாளர்கள் Accord Advertising Agencies, சென்னை நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு. (ந.க.எண்.122/2023/இ1)<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td>419</td>
<td>
<u>மன்றப்பொருள் எண்.31</u><br>
இந்நகராட்சி பொதுசுகாதாரம் பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் 4 சக்கர வாகனங்களை இயக்க 4 ஓட்டுநர்கள் பணி செய்ய 15.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>பெயர் மற்றும் முகவரி</th><th>ஒரு ஓட்டுநருக்கு நாள் ஒன்றுக்கு. ரூ.</th></tr>
<tr><td>1</td><td>எம்.லத்திப் , ஒப்பந்ததாரர்,<br>36, நாளங்காடி தெரு, மேலூர்</td><td>520/-</td></tr>
<tr><td>2</td><td>எம்.அஜ்மல்கான் ஒப்பந்தாரர்,<br>33, மார்க்கெட் தெரு, மேலூர்.</td><td>555/-</td></tr>
</table>
பெறப்பட்ட மேற்கண்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.எம்.லத்திப் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு.<br>
அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

ஆணையாளர்,

மேலூர் நகராட்சி.